# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2016

**தரம் : 11** **தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**

## விடைகள்
### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 3 | 21. | 4 | 31. | 2 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 4 | 32. | 3 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 4 | 33. | 1 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 1 | 34. | 3 |
| 05. | 4 | 15. | 2 | 25. | 4 | 35. | 2 |
| 06. | 4 | 16. | 4 | 26. | 2 | 36. | 1 |
| 07. | 1 | 17. | 3 | 27. | 4 | 37. | 4 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 3 | 38. | 1 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 2 | 39. | 2 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 4 | 40. | 3 |

### பகுதி - II

*01.* 1) *தொலைக்காட்சி ஒரு கட்புல செவிப்புல ஊடகமாகும்.*
*கூடியளவு காட்சிசார் நிகழ்ச்சிகள் வெளிப்படல்.*
*அண்மித்த ஊடகமாக காணப்படல்.*
*ஆர்வம் ஊட்டும் வலுவான வெகுஜன ஊடகம்.*

2) *அச்சூடகம் :- பத்திரிகை*
*இலத்திரனியல் ஊடகம் :- வானொலி, தொலைக்காட்சி*

3) **குழுத்தொடர்பாடல்:**
*குழுத்தொடர்பாடல் உயிர்ப்பு மிக்கதாகக் காணப்படும்.*
*கருவி இன்றியும், கருவியூடாகவும் தொடர்பு இடம்பெறலாம்.*
*பின்னூட்டம் இடம்பெறும்.*
*ஓரளவு தடை காணப்படலாம்.*
*ஏதாவது பிரேரனை அல்லது பிரச்சினைக்கு பொது உடன்பாடு எட்டப்படும்.*

4) *விரல் மற்றும் கையசைவு*
*முகபாவனை*
*ஆடை*
*உடலசைவு*

Eg:- *ஒரு கிரிக்கட் விளையாட்டு வீரர் விளையாட்டில் வெளியேறல். சந்தர்ப்பத்தில் நடுவரால் வெளிப்படுத்தப்படும் கையசைவுகள். மரியாதை செலுத்துதல்.*

Eg:- *வீரர்கள் தங்களுக்கள் கைகுலுக்குதல்.*

5) *வானொலி ஓர் செவிப்புல ஊடகமாகும். ஆனால் தொலைக்காட்சி கட்புலம், செவிப்புலம் சார்ந்த ஊடகமாகும்.*
*வானொலி குறைந்த செலவு கொண்ட ஊடகமாகும். ஆனால் தொலைக்காட்சி அதிக செலவு கொண்ட ஊடகமாகும்.*
*வானொலி ஊடகத்தில் நேயர்களின் அறிவு, மொழி, இரசனை, ஆர்வம் அடிப்படையில் புலக்காட்சி மற்றும் கற்பனாசக்தி உருவாக்கும் இயல்பைக் கொண்டது. ஆனால் தொலைக்காட்சி ஊடகத்தில் நேயர்களின் இரசிகர்களின் கற்பனை புலக்காட்சி விரிவாக்கம் குறைவடையும் சந்தர்ப்பம் காணப்படல்.*

*வானொலி ஊடகத்தை இலகுவாக கையாள முடியும். ஆனால் தொலைக்காட்சி ஊடகத்தை அவ்வாறு எளிதாக கையாள முடியாது.*

6) *ஊடக மூலாதாரம் - தனிநபர் மூலாதாரம் :- Eg - ஆசிரியர் , அரசியல்வாதிகள்*
*நிறுவன மூலாதாரம்* Eg:- *நிதி நிறுவனம், நலன்புரிச்சங்கம்*
*எழுத்து மற்றும் இலக்கம்சார் மூலாதாரம்.* Eg :- *சஞ்சிகைகள், கல்வெட்டுக்கள்*

7) மிக வேகமாக அதாவது ஏனைய ஊடகங்களை விடவும் வேகமாக செய்திகளை பரிமாற்றம் மற்றும் பெறுகை செய்யும் வாய்ப்பு காணப்படல்.
பல்லூடக வசதிகள் இவ் ஊடகத்தில் காணப்படல்.
இவ் ஊடகம் மூலம் தரவேற்றம். தரவிறக்க வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.
தகவல்களை இலகுவாகவும் எமக்கேற்ற விதத்திலும் பயன்படுத்த முடியும்.

8) வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத விடயங்களை புகைப்படம் ஊடாக வெளிப்படுத்த முடியும்.
செய்தியை புரிந்து கொள்வது இலகுவானதாக அமையும்.
மக்களின் கவனத்தினை ஈர்க்க முடியும்.

9) ஆவணப்படுத்தக் கூடியதாக இருத்தல், எழுத்தறிவு அவசியமானதாகும், விளக்கிச் சொல்லமுடியும், எவ் வேளையிலும் பயன்படுத்த முடியும், செய்திகளை உடனுக்குடன் பெறமுடியாது,

10) சஞ்சிகை, சுவரொட்டி, துண்டுப்பிரசுரம்.

02. 1) ஊடக இடையூறு, மொழி ரீதியான இடையூறு

2) இரு நபர்களுக்கிடையில் தொடர்பு இடம்பெறல், உயிரோட்டம் மிக்க தொடர்பாக இருத்தல், பின்னூட்டல்களை உடனுக்குடன் பெறமுடிதல், தடைகள் குறைவாகக் காணப்படும், தொழினுட்ப கருவிகளையும் பயன்படுத்த முடியும், நேருக்கு நேராகவும், கருவி வழியாகவும் இடம்பெறல்.


3) தகவல் வழங்கல் — சமூக மயமாக்கல்
கல்வி — சமூக சுகவாழ்வு
பொழுதுபோக்கு — அறிவுறுத்தல் (ஏதாவது 2 ஐ விளக்குதல்)

4) குழுகலந்துரையாடல், அவதானிப்பு, வினாக்கொத்து, மூளைப்புயல், ஆவணப் பரிசீலனை
(4 ஐ விளக்குதல்)

03. 1) ஆம்
தொலைக்காட்சி சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பு செலவு அதிகமாக காணப்படுவதால் விளம்பர நேரத்தை இவ் ஊடகம் ஓர் வருமானமாக ஆக்கிக்கொண்டுள்ளது. அத்தோடு அதிகளவு நேயர்கள் தொலைக்காட்சியை பார்க்கும் நேரங்களில் தொலைக்காட்சி விளம்பரங்களை திரையிடுவதற்கான கட்டணமும் அதிகமாகக் காணப்படுகிறது.

2) ஆம்
பூகோளமயமாதலினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்த ஒரு இடத்திலிருந்தும் செய்தியை பெறும் வாய்ப்பு காணப்படல்.
தொழினுட்ப ரீதியான வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இவ் ஊடகங்கள் வளர்ச்சி பெறல்.
இலகுவாக கையாளக் கூடியதற்கான வாய்ப்பு காணப்படல்.

3) ஆம்




இங்கு தலைமைச் செய்தியில் யார், என்ன, எப்போது, எங்கே, எவ்வாறு, எப்படி, போன்ற விடயங்களின் அடிப்படையில் விடயங்கள் தயாரிக்கப்படும். அடுத்து உடலில் (தலைமைச் செய்தின் கீழ் எழுதப் படும் பந்தியில்) சம்பவத்திற்கு பின்புற மாக உள்ள தகவல்கள் உள்ளடக்கப்படும்.

4) ஆம்
மக்களை கவரும் தன்மை, கவனத்தை ஈர்க்கும் வாக்கிய அமைவு, விழிப்பு மற்றும் வித்தியாசமான பாணியிலான கருத்துப்படங்கள் சித்தரிக்கப்படுதல். பொதுமக்கள் கூடுமிடங்கள் / இயல்பாக கட்புல பார்வைக்குட்படும் இடங்களில் காட்சிப்படுத்தல்.
மக்களை கவரக்கூடிய வர்ணங்கள், படங்கள், உருவங்கள், ஓவியங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல்.
மக்களுக்கு கூற வேண்டிய முக்கிய விடயத்தை சுருக்கமான சொற்களைப் பயன்படுத்தி எழுத்துரு வாக்கம் செய்யப்பட்டிருத்தல்.

(விளக்கம் தரப்படல் வேண்டும்)

04. 1) குழுத் தொடர்பாடல்

2) பொதுவான முடிவுகளை எட்டுவதற்கு முயற்சித்தல்.
சிறப்பான வகையில் செவிமடுத்தல்
புரிந்துணர்வுடன் செயற்படல்.
குழுத் தலைவரை மதித்தலும் அவர்களின் கருத்துக்கு இணங்கலும்.
சந்தேகங்களை தெளிவுபடுத்தல்.
தேவையற்ற குறுக்கீடுகளை தவிர்த்தல்.

3) "முறைசாரா தொடர்பாடலானது எவ்வித நோக்கமும் அற்றதாக காணப்படல். ஆனால் முறைசார் தொடல்பாடலானது குறித்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

முறைசார தொடர்பாடலானது வேகமாக செய்திகள் பரப்பப்படுவதை குறிக்கும். முறைசார் தொடர்பாடலானது ஒப்பீட்டு ரீதியில் தாமதமானதாகக் காணப்படும்.

முறைசாரா தொடர்பாடலில் செய்தியானது மாற்றமடையக் கூடியதாகவும், உறுதியற்றதாகவும் காணப்படும். ஆனால் முறைசார் தொடர்பாடலில் செய்தி உறுதியானதாகவும் மாற்றத்திற்குட் படாததாகவும் காணப்படும்.

முறைசாரா தொடர்பாடலானது நெகிழ்ச்சிப் போக்கானதாகவும் தகவல் திரிபு /பிழையான விளக்கம் ஏற்படும் வகையிலும் காணப்படும். ஆனால் முறைசார் தொடர்பாடலானது நெகிழ்ச்சி போக்கற்ற தன்மையும் தகவல் திரிவு மற்றும் தவறான விளக்கம் ஏற்படாத வகையிலும் காணப்படும்.

4)

| கூட்டுத்தொடர்பாடல் | வெகுஜனத் தொடர்பாடல் |
|---|---|
| 1) பெறுநர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு ரீதியில் சிறியது. | பெறுநர் எண்ணிக்கை விசாலமானது. |
| 2) ஊடக உபகரணப்பாவனை அவசியமல்ல. | ஊடக உபகரணப் பாவனை அவசியமானது. |
| 3) வாயிற் காப்பாளர் இல்லை. | வாயிற்காப்பாளர் அவசியம். |
| 4) ஒப்பீட்டு ரீதியில் பின்னூட்டம் உடனடி யானது. | ஒப்பீட்டு ரீதியில் பின்னூட்டம் தாமதமானது. |
| 5) அனுப்புநர், பெறுநர் தொடர்பு நெருக்கமானது. | அனுப்புநர், பெறுநர் தொடர்பு நெருக்கமற்றது. |

(உதாரணங்களுடன் விளக்குதல்)

05. 1) கட்புலத் தொடர்பாடல்

2) எளிமையானதாக இருத்தல், சுருக்கமாக இருத்தல், ஆக்கபூர்வமாக அமைதல், படைப்பாக்கத் திறன் கொண்டதாக அமைதல், ஆர்வத்தை தூண்டும் வகையில் அமைந்திருத்தல், கவர்ச்சி மிக்கதாக அமைதல்.

3) கறுப்புவெள்ளைப் புகைப்படச்சுருள், வர்ண புகைப்படச்சுருள், எதிர்மறை புகைப்படச்சுருள், வர்ண வழுக்கி படச்சுருள்

4) உடல் அசைவு, முகபாவனை, கண் அசைவு, விரல் மற்றும் கையசைவு, சமிக்கை

(ஏதாவது ஒன்று பற்றி விளக்கமளித்தல் வேண்டும்)

06. 1) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு.
இலங்கை திரைப்பட தன்னியக்கசபை

2) திரைப்பட தன்னியக்க சபை
வன்முறைகள், கட்டற்ற சமூகப் பிறழ்வுகளையும் சீரழிவுகளையும் தூண்டக் கூடிய பாலியல் காட்சிகள், அடிப்படைவாதக் கருத்துக்கள் பரவல் போன்றவை திரைப்படங்கள் ஊடாக ஊடுருவுவதை கட்டுப்படுத்தி திரைப்படங்களுக்கு திரையீட்டு அனுமதி சான்றிதழ்களை வழங்குகிறது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு, இணையம் முதலிய புதிய ஊடகங்கள் சமூகத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதை கட்டுப்படுத்தல்.

3) உடனடியாக செய்தியை தெரிந்து கொள்ளல், களஞ்சியப்படுத்துவதற்கான வாய்ப்பு, மீண்டும் மீண்டும் வாசிக்கக் கூடிய வசதி, தகவலுக்கேற்ப வகைப்படுத்தலை மேற்கொள்ள முடிதல், காலம் சென்றும் பாவனை செய்ய முடியும்.

(சுருக்கமாக விளக்குதல்)

4) பலவித பொருள்கள் சேவைகள் பற்றி தவறான புரிதலை மக்களுக்கு வழங்குதல்.
வன்முறைகள் தூண்டப்படுதல்.
சிறுவர்களுக்கு உளரீதியான பாதிப்பு ஏற்படல்.
கலாச்சாரம், சுதேச பழக்கவழக்கம் பாதிப்படைதல்.
வர்த்தக மையம் தூண்டப்படல்.

(உதாரணங்களுடன் விளக்குதல்)

07. 1) செயற்படுபெறுநர் / இயக்கமுள்ள பெறுநர், செயற்படா பெறுநர் / இயக்கமற்ற பெறுநர்

2) குறுஞ்செய்தி, தொலைபேசி அழைப்பு, அஞ்சலட்டைகள், இணையத்தளம், செயதித்தாள்களுக்கு கடித ஆக்கம்

3) சிறுவர் மத்தியில் உளரீதியான பாதிப்பு ஏற்படல்.
சிறுவர்களை தனிமைப்படுத்தல் செயற்பாடு இடம்பெறல்.
அவர்களிடையே வன்முறை தூண்டப்படல்.
Eg:- கார்டுன் திரைப்படம், திரைப்படம், விளம்பரங்கள்

(உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குதல்)

4) ஊடகங்களில் மறைக்கப்படுபவற்றை விளங்கிக் கொள்ளும் திறன்.
வெகுஜன ஊடக செய்திகளை சரியாக விளங்கிக்கொள்ளல்.
தமக்குத் தேவையான செய்திகளை மாத்திரம் பெறுகை செய்யும் திறன்.
வெகுஜன ஊடக குறிக்கோள்களை புரிந்து கொள்ளும் ஆற்றல்.
வெகுஜன ஊடகங்கள் மக்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் என்பவற்றை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.